# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## புனர்வாழ்வுப் பணியகம்

**புனர்வாழ்வுப் பணியகம் என அழைக்கப்படவேண்டியதும் அறியப்பட வேண்டியதுமான பணியகமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2022, செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *152 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 55.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# புனர்வாழ்வுப் பணியகம்

ச.வ.- ஓ. 8/2018

**புனர்வாழ்வுப் பணியகம் என அழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான பணியகமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

முன்னுரை

பிழைவழியில் நெறிப்படுத்தப்பட்ட போராளிகள், அதிதீவிர அல்லது அழிவேற்படுத்தும் நாசகாரச் செயல்களில் ஈடுபடும் தனியாட்கள் மற்றும் ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களாக வந்துள்ள ஆட்களின் புனர்வாழ்வை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையையும் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டும், இது பாரதூரமான சிக்கலொன்றாகவும் தேசிய பிரச்சினையொன்றாகவும் வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிப் பதவி (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் சனாதிபதியானவர் பிழைவழியில் நெறிப்படுத்தப்பட்ட போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் பொறுப்பை அத்தகைய புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கு தொடக்கத்தில் உரித்தாக்கியுள்ளாராதலாலும் அத்தகைய பொறுப்பை அதிதீவிர அல்லது அழிவேற்படுத்தும் நாசகாரச் செயல்களில் ஈடுபடும் தனியாட்கள் மற்றும் ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களாக வந்துள்ள தனியாட்களுக்கு மேலும் நீடித்துள்ளதாதலாலும்:

அத்துடன் மேலே சொல்லப்பட்ட ஆட்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக்கத்துக்காக பணியகம் ஒன்றைத் தாபிப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, புனர்வாழ்வுப் பணியகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (இதனகத்துப் பின்னர், "நியமிக்கப்பட்ட தேதி" எனக்குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டம் எத்தேதியன்று பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

பாகம் I

**புனர்வாழ்வுப் பணியகத்தைத் தாபித்தல்**

**2.** (1) (இதனகத்துப்பின்னர், "பணியகம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) "புனர்வாழ்வுப் பணியகம்" என அழைக்கப்பட வேண்டிய பணியகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். புனர்வாழ்வுப் பணிகயத்தைத் தாபித்தல்

(2) பணியகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக் கப்பட்ட பெயரின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன் அத்தகைய பெயரில் வழக்குத்தொடுக்கலாம் அதற்கெதி ராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**3.** பணியகத்தின் குறிக்கோளானது, சமூக பொருளாதார நியமங்களை அபிவிருத்திசெய்வதினூடாக பயனுள்ள மீள் ஒன்றிணைவு மற்றும் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கென பல்வேறு சிகிச்சைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வை தேவைப்படுத்துகின்ற ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள், முன்னாள் போராளிகள், வன்முறையான அதிதீவிர குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் வேறு ஏதேனும் ஆட்கள் குழுவுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக விருத்தல் வேண்டும். பணியகத்தின் குறிக்கோள்

பணியகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**4**. பணியகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) சிகிச்சை மற்றும் புனர்வாழ்வைக் கோருகின்ற அல்லது சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்கப்படுவதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வை வழங்குதலும்;

(ஆ) சிகிச்சை மற்றும் புனர்வாழ்வைக் கோருகின்ற அல்லது சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்கப்படுவதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற முன்னாள் போராளிகள், வன்முறையான அதிதீவிர குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் வேறு ஏதேனும் ஆட்கள் குழுவுக்கு புனர்வாழ்வளித்தலும்;

(இ) சமூக பொருளாதார ஓரங்கட்டுகையின் ஆபத்தைக் குறைத்து, சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வுக்கு உட்பட்ட ஆட்களின் தொழிலுக்கமர்த்தக்கூடிய தன்மையை அதிகரித்தலும்;

(ஈ) பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு உற்பத்தித்திறன் உள்ள முறையில் சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வுக்கு உட்படுகின்ற, ஆட்களின் இயல்திறன்களை பயன் படுத்துவதற்கு அவற்றை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் ஈடுபடுத்துதலும்;

(உ) சிசிச்சை மற்றும் புனர்வாழ்வுக்குப் பின்னர் சமூகத்தில் மீள ஒன்றிணைக்கப்பட்டுள்ள ஆட்களைப் பரிசீலனை செய்தலும், கண்காணித்தலும் மற்றும் அவர்களுக்கு வேறு ஏதேனும் உதவியை வழங்குதலும்;

(ஊ) பணமாக அல்லது பொருளாக மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறுதலும்:

ஆயின் எவ்வாறாயினும், பணியகமானது, பணியகத்துக்கு அளிக்கப்படும் எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(எ) அது தோதானதெனக் கருதுகின்றவாறான ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கைத் திறத்தலும் பேணுதலும் அத்துடன் அத்தகைய கணக்கு, நிலவுகின்ற ஏற்புடையற் பாலதான எழுத்திலான சட்டங்களுக்கிணங்க செயற் படுத்தப்படுதல் வேண்டும்;

(ஏ) பணியகத்தின் நிதியத்தை முகாமைசெய்தலும், கட்டுப் படுத்துதலும், நிர்வகித்தலும் மற்றும் செயற்படுத்துதலும்;

(ஐ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு உடனடியாக தேவைப் படாத பணியகத்துக்குச் சொந்தமான அத்தகைய பணத் தொகைகளை முதலீடு செய்தலும்;

(ஒ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகை அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடகுவைத்தல், விற்பனைசெய்தல் அல்லது வேறுவகை யாக கையுதிர்த்தல்;

(ஓ) பணியகத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் அதன் எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாக ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் செய்துகொள்ளலும் புரிதலும்;

(ஔ) பணியகத்தின் அலுவல்களின் நிருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதலும்;

(க) புனர்வாழ்வுக்கான நிலையங்களைத் தாபித்துப் பேணுதலும்:

ஆயின் எவ்வாறாயினும், ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக தாபிக்கப்படும் நிலையங்கள், தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பின் கீழ் தாபிக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும்;

(ங) புனர்வாழ்வளித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலும்; அத்துடன்

(ச) இச்சட்டத்தின் குறிக்கோளை எய்துவதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் பணியகத்துக்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு இடைநேர்விளைவான அல்லது உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தலும்.

## பாகம் II

### பணியகத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்

பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட பணியகத்தின் நிருவாகமும் முகாமையும்

**5**. (1) பணியகத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு (இச்சட்டத்தில் "பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) ஆளும் பேரவையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, பணியகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் பணியகத்திற்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் மீது விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பேரவையை அமைத்துருவாக்குதல்

**6**. பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது -

(i) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதிநிதியொருவர்;

(ii) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவ்வமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அவரது பிரதிநிதி;

(iii) அரசியலமைப்பின் **44** ஆம் அல்லது **45** ஆம் உறுப்புரையின் கீழ் எந்த அமைச்சருக்கு புனர்வாழ்வுப் பணியகம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவ்வமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அவரது பிரதிநிதி;

(iv) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவ்வமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அவரது பிரதிநிதி;

(v) கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவ்வமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அவரது பிரதிநிதி; அத்துடன்

(vi) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அவரது பிரதிநிதி; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டியவர்களும் புனர்வாழ்வளித்தல், சமூக ஒன்றிணைவு, சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகிய துறைகளில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டியவர்களும், அமைச்சரினால் நியமிக்கப்படுபவர்களுமான மூன்று உறுப்பினர்கள்.

பேரவையின் தவிசாளர்

**7**. (1) அமைச்சர் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை பேரவையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை அமைச்சரினால் அது ஏற்றுக்கொள்ளப் படுகின்ற தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரின் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய, தவிசாளரின் பதவிக்காலம் பேரவையில் அவரது உறுப் பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தனது பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர் வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை, நியமிக்கப்பட்ட உறுப்பின ரொருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

பேரவையின் உறுப்பின ரொருவராக விருப்பதற்கான தகைமை யீனங்கள்

**8**. ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந் திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும் :-

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராகவிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராகவிருந்து பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற வராக அல்லது வங்கிமுறிந்தவராகவிருந்தால்;

(உ) அபாயகரமான ஔடதங்கள், போதையூட்டும் ஔடதங்கள் அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் அல்லது மோசடி சம்பந்தமான தவறொன்று தொடர்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புலனாய்வொன்றுக்கு அமைந்தவராகவிருந்தால்;

(ஊ) இலங்கையில் உள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப் பொன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(எ) பணியகத்தினால் அல்லது அதன்சார்பாக செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(ஏ) பேரவையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதை பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

பதவிக் காலம்

**9**. பேரவையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் பதவிவிலகுவதன் மூலம், அவரது இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக மேலதிகவொரு காலத்துக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

பதவி விலகுகை மற்றும் பதவியிலிருந்து அகற்றப்படுதல்

**10**. (1) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும் அப்பொருள்பட்டதுமான கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம், உடற்தகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(3) அமைச்சர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, நியமிக்கப் பட்ட உறுப்பினரொருவரை பதவியிலிருந்து அகற்றலாம். பதவியி லிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் பேரவையின் உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது வேறு ஏதேனும் தன்மையில் பேரவைக்கு சேவையாற்று வதற்கு தகவுடையவராதலாகாது.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவிவிலகுகின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படு கின்றவிடத்து, அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பி னரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தலும் வேண்டும்.

பேரவையின் கூட்ட நடப்பெண் மற்றும் கூட்டங்கள்

**11.** (1) பேரவையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும் என்பது டன் பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாகவிருத்தலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கு தவிசாளர் வருகைதராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர் களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) பேரவையின் கூட்டமொன்று ஒன்றில் –

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடம், தேதி மற்றும் நேரத்தில் ஒன்றுகூடி கூட்டநடப்பெண்ணை அமைத்துரு

வாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்; அல்லது

(ஆ) எந்த கட்புல, செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம், பங்குபற்றுகின்றவர்களும் கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்ட காலவேளையின்போது ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரை உடனிகழ்வாக பார்க்கவும் கேட்கவும் முடியுமோ அந்த கட்புல, செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபொன்றுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்துக்கு சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை பேரவை ஒழுங்கு படுத்தலாம்.

*ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக பேரவையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது*

**12**. பேரவையானது, அதன் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏதேனும் வெற்றிடம் எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் பேரவையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கைமுறை அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது அல்லது செல்லுபடியற்றதாக கருதப்படுதலாகாது.

**பேரவையின உறுப்பினர் களின் ஊதியம்**

***13***. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதத்திலும் பேரவையின் உறுப்பினர்களுக்கு ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

**பணியகத்தின் இலச்சினை**

***14***. (*1*) பணியகத்தின் இலச்சினை, பேரவையானது காலத்துக் குக்காலம் முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(*2*) பணியகத்தின் இலச்சினை, பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(*3*) பணியகத்தின் இலச்சினை, பேரவையின் வலுவளிப்புடனும் பேரவையின் தவிசாளரினதும் வேறு ஓர் உறுப்பினரினதும் முன்னிலையிலும் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது; அவர்கள் தாம் சமுக மாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், பணியகத்தின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுகின்றபோது, தவிசாளர் சமுகமளிப்பதற்கு இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அதன் சார்பாக தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பேரவையின் வேறு எவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டிற்கு இணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு தகுதியானவராதல் வேண் டும்.

(*4*) பணியகத்தின் இலச்சினை எந்த சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை பணியகம் பேணுதல் வேண்டும்.

பாகம் III

## பணியகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரும் பணியாட்டொகுதியினரும்

பணியகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரை நியமித்தல்

**15.** (1) அமைச்சருடனான கலந்தாலோசனையுடனும் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் விதப்புரையின் மீதும் பேரவையினால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "ஆணையாளர் தலைமையதிபதி" எனக்குறிப்பீடு செய்யப்படும்) புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி என அழைக்கப்பட வேண்டியவரும் அறியப்படவேண்டியவருமான பணியகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரொருவர் இருத்தல் வேண்டும். ஆணையாளர் தலைமையதிபதி, இறப்பின்மூலம், சட்டத்தின் நடைமுறைமூலம், பதவி விலகுகையின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, இரண்டு ஆண்டு காலத்துக்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக எவையேனும் இரண்டு அதிகபட்ச பதவிக்காலப் பகுதியொன்றுக்கு அமைய மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி பேரவையின் பொதுப் பணிப்புகள் மற்றும் மேற்பார்வைக்கு அமைய–

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகம் மற்றும் அவர்கள் மீதான கட்டுப்பாடு உட்பட பணியகத்தினதும் அதன்கீழ் தாபிக்கப்பட்ட நிலையங்கள் எல்லாவற்றினதும் அலுவல்களின் நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் எல்லா முடிபுகளையும் நிறைவேற்றுவதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பேரவையினால் அவருக்கு குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கு சமுகமளித்து உரையாற்றுதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராத லாகாது.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, பேரவையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட அவரின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் பணியகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளித்தல் அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம், அவ்வாறு செய்யலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி எந்த அலுவலர் அல்லது ஊழியருக்கு கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர் அல்லது ஊழியர், ஆணையாளர் தலைமையதிபதியின் பணிப்புகளுக் கமைய, அவற்றை பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) பேரவையானது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணையாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்–

(அ) அவர், அவரது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) ஒரு மோசடியான அல்லது சட்டவிரோதமான தன்மையினதானதென பேரவை முடிபுசெய்துள்ள அல்லது பணியகத்தின் அக்கறைகளுக்குப் பங்கமாகவுள்ள ஏதேனும் செயலை அவர் செய்திருந்தால்; அல்லது

(இ) பேரவையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகத் தவறியிருந்தால்.

(6) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

பணியகத்தின் பணியாட் தொகுதியினர்

**16.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பணியகமானது அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை வினைத் திறனுடன் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் அல்லது நியமிக்கலாம்.

(2) பேரவையானது, பின்வருவனவற்றைச் செய்வதற்கு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணியகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் அவர்களை நீக்குவதற்கும்;

(ஆ) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணியகத்தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(இ) எந்த வீதங்களில் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஊதியமளிக்கப்படவேண்டுமோ அந்த வீதங்களை நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் நிர்ணயிப்பதற்கும்.

(3) பணியகத்தின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் தொழிலுக்கமர்த்தப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் பணியகத்தின் அலுவல்களிலும் கொடுக்கல்வாங்கல்களிலும் அவர்களின் கிட்டிய உறவினர்களின் தனிப்பட்ட நேரடியான அல்லது நேரடியாக வல்லாத அக்கறை உட்பட அவர்களின் அக்கறையை அல்லது எந்த கரிசனைகளில் அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் கணிசமான அளவு அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்த கரிசனைகளை பணியகத்திற்கு எழுத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(4) பணியகமானது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணையாளர் தலைமையதிபதி, அதன் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின், அவர்களின் தங்கி வாழுநர்கள் மற்றும் நியமத்தர்களின் நன்மைக்காக ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் திட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியம் அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளையும் செய்யலாம்.

(5) பணியகமானது, அதன் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பயிற்சியை மேம்படுத்துதலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டும் என்பதுடன் இந்நோக்கத்துக்காக பணியகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறமையைக் கொண்ட பணியகத்தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கற்கைக்கான ஆகுசெலவுகளை கொடுத்துத்தீர்ப்பதற்கு பணியகம் அதிகாரமளிக்கப்படுதலும் வேண்டும்.

(6) பணியகமானது, பணியகத்தின் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஏற்புடையதாகவேண்டிய நடத்தைக் கோவை ஒன்றைத் தாபித்தல் வேண்டும்.

(7) எவரேனும் ஆள் -

(அ) நீதிமன்றம் அல்லது நியாயசபையொன்றினால் பாரதூரமான துர்நடத்தைக்கு குற்றவாளியாக, முன்னர் காணப்பட்டுள்ளவிடத்து அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்றினாலான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அமைந்தவராகவுள்ளவிடத்து;

(ஆ) முன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது விதிகளின் ஏற்பாடுகளின் மீறுகையொன்றைப் புரிந்துள்ளவிடத்து,

(1)ஆம் உட்பிரிவின்கீழ் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய ஆளை பணியகம் நியமித்தலாகாது.

(8) பணியகத்தின் கோரிக்கையின் பேரில் பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசியலமைப் பினால் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் பணியகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பணியகத்திற்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், பணியகத் தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(10) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(11) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத் திற்கு சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை பணியகம் தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினாலான பணியகத்திற்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(12) பணியகமானது, அத்தகைய அலுவலரினது அல்லது ஊழியரினது சம்மதத்துடன் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஒழுங்கு

படுத்தும் அதிகாரசபைகளுக்கும் பணியகத்துக்கும் இடையில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட குறித்தளிப்பொன்றின் மீது பணியகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான காலப்பகுதி யொன்றிற்கு அத்தகைய நிறுவனங்களுக்கு அல்லது அதிகார சபைகளுக்கு அதன் அலுவலர்களை அல்லது ஊழியர்களை மாற்றுச்சேவைக்கு விடும்படி முன்மொழியலாம். மாற்றுச் சேவைக் காலப்பகுதியானது பணியகத்துக்கான சேவையாகக் கொள்ளப் படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரமளிக்கப்பட்ட படை உறுப்பினர்கள்*

**17.** (1) சனாதிபதி, அமைச்சரின் கோரிக்கையின் மேல், இச்சட்டத் தின் நோக்கங்களுக்காக, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இச்சட்டத்தின் கீழான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கக்கூடியவர்களான, புரியக்கூடியவர்களான மற்றும் நிறைவேற்றக்கூடியவர்களான அதிகாரமளிக்கப்பட்ட படை உறுப்பினர்களாக பின்வருபவர்கள் எல்லோரையும் அல்லது அவர்களுள் எவரையும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் பெயர்குறிக்கலாம்-

(அ) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கை தரைப்படை உறுப்பினர்கள்;

(ஆ) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கை கடற்படை உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கை வான்படை உறுப்பினர்கள்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், இச்சட்டத்தின் கீழான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள், அவ்வதிகாரமளிக்கப்பட்ட படை உறுப்பினர்களினால் பிரயோகிக்கப்படக்கூடியவாறான, புரியப்படக்கூடியவாறான மற்றும் நிறைவேற்றப்படக்கூடியவாறான இடப்பரப்புகளை குறித்துரைக்கலாம்.

(3) இப்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட படை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்கள் மீது விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள், அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படை சட்டத்தின், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் அல்லது (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை அல்லது அவர்கள் மீது விதிக்கப்படுவதில்லை எவ்வாறிருப்பினும், பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

*சுகாதாரத் திணைக்களம் முதலியவற்றின் அலுவலர்களின் சேவைகளின் பயன்பாடு*

**18.** சுகாதார திணைக்களத்தின் எவரேனும் மருத்துவ அலுவலர் அல்லது எவரேனும் வேறு அலுவலர் அல்லது ஊழியரின் அல்லது ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது எவரேனும் மருத்துவத் தொழிலரின் அல்லது ஒத்த சேவையொன்றில் ஈடுபட்டுள்ள வேறு எவரேனும் தகுதிவாய்ந்த ஆளின் சேவைகள், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புனர்வாழ்வுக்கான நிலையங்களில் உதவுவதற்கு விடயத்துக்கேற்ப சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது வேறு இயைபான அதிகாரியின் அங்கீகாரத்துக்கமையப் பெறப்படலாம்.

## பாகம் IV

## நிதி

*பணியகத்தின் நிதியம்*

**19.** (1) பணியகமானது, (இதனகத்துப்பின்னர் ''நிதியம்'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் வரவுக்கு இருக்கும் எல்லாப் பணங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக நிதியத்துக்கு கைமாற்றப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்-

(அ) பணியகத்தின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பணியகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து வருமானம், கட்டணங்கள், விதிப்பனவுகள், மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் என்றவகையாக பணியகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், பணியகமானது, பணியகத்துக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் பணியகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**20.** (1) பணியகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பேரவை, பணியகத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பணியகத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பேரவையானது, எந்த நிதியாண்டுடன் கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்புடையதோ அந்த நிதியாண்டின் இறுதியிலிருந்து நூற்றி ஐம்பது நாட்களினுள் அத்தகைய அறிக்கையுடன் சேர்த்து கணக்குகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர், அத்தகைய கூற்றையும் அறிக்கையையும் பெற்றதிலிருந்து இரண்டு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் அவற்றை இடுதல் வேண்டும்.

## பாகம் V

## பொது

பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்

**21.** (1) பேரவையானது, எழுத்திலும் அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகள் மற்றும் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை ஆணையாளர் தலைமையதிபதிக்கு கையளிக்கலாம் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி பேரவையின் பெயரிலும் அதன் சார்பிலும் அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பேரவை, அதனால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன் எந்நேரத்திலும் அத்தகைய ஏதேனும் கையளிப்பை இல்லாதொழிக்கலாம்.

**துடர்ச்சி அல்லது குற்ற வழக்கிலிருந்து பணியகத்தின் அலுவலர்களைப் பாதுகாத்தல்**

**22.** (1) குடியியலாயினுஞ்சரி அல்லது குற்றவியலாயினுஞ்சரி பொறுப்பொன்று, இச்சட்டத்தின்கீழ் பணியகத்தின் மீது விதிக்கப்பட்ட அல்லது அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியை பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட எதற்கும் பணியகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது அத்தகைய அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு இணைக்கப்படுதலாகாது.

(2) பணியகத்தினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பணியகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பணியகத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் கீழ் அல்லது பணியகத்தின் பணிப்பின் மீது அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவு அவரினால் அறவிடப்பட்டாலொழிய திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

புனர்வாழ்வுக் கான நிலையங்கள்

**23.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், முன்னாள் போராளிகள், வன்முறையான அதிதீவிர குழுக்களின் உறுப்பினர்கள், வன்முறையான அதிதீவிர ஆள் மற்றும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழுவின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வுக்காக, புனர்வாழ்வுக்கான நிலையங்களைத் தாபிக்கலாம்:

ஆயின், ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பதற்காக இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சிகிச்சை நிலையங்கள், 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்தனவாதலும் வேண்டும்.

ஔடதங்களின் வழங்குகை

**24.** அபாயகரமான ஔடதமொன்றை, போதையூட்டும் ஔடதமொன்றை அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தமொன்றை அல்லது ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பொருளை ஏதேனும் புனர்வாழ்வுக்கான நிலையமொன்றினுள் அதிகாரமின்றி அறிமுகப்படுத்துகின்ற அல்லது அறிமுகப்படுத்த எத்தனிக்கின்ற அல்லது அத்தகைய நிலையத்தில் எவரேனும் ஆளுக்கு வழங்குகின்ற அல்லது வழங்க எத்தனிக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

இரகசியம் பேணுவதற்கான கடமை

**25.** (1) பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும், பணியகத்தின் ஆணையாளர் தலைமையதிபதி மற்றும் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், அவரது பதவியின் கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்று

வதிலும் அவரால் பெறப்பட்ட அல்லது அவரது அறிவுக்கெட்டுகின்ற எவையேனும் தகவல்களை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக தவிர அவர் வெளிவிடமாட்டார் என வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) புனர்வாழ்வுக்கான நிலையமொன்றின் கட்டுக்காப்பில் உள்ள ஆளொருவர் தொடர்பிலான எல்லாப் பதிவேடுகளும், அந்தரங்க மானதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் மீது தவிர அல்லது புனர்வாழ்வுக்கான நிலையமொன்றினுள் பாரதூரமான தவறொன்றைப் புரிதல் தொடர்பிலான புலனாய்வொன்று சம்பந்தமாக தவிர வெளியிடப் படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*சிகிச்சைக் குட்பட்டுள்ள ஆட்களை அடித்தல் முதலியன*

**26.** புனர்வாழ்வுக்குட்பட்டுள்ள எவரேனும் ஆளை நியாயமான காரணமின்றி அடிக்கின்ற, காயப்படுத்துகின்ற, கொடூரமாக நடாத்துகின்ற அல்லது வேண்டுமென்று அசட்டை செய்கின்ற, புனர்வாழ்வுக்கான நிலையமொன்றில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பதினெட்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஊழியர்களுக்கு முட்டுக் கட்டையிடுதல் தவறொன்றாதல்

**27.** புனர்வாழ்வுக்கான ஏதேனும் நிலையமொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தனது கடமைகளைப் புரிகையில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது முட்டுக்கட்டையிடுவதற்கு எத்தனிக்கின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தப்பியோடும் ஆட்களைப் பிடித்தல்

**28.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட புனர்வாழ்வுக்கான நிலையமொன்றில் புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற எவரேனும் ஆள், அத்தகைய நிலையத்திலிருந்து தப்பியோடுகின்றவிடத்து, அவர், எவரேனும் பொலிசு அலுவலரினால், எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட படை உறுப்பினரினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் பிடிக்கப்பட்டு புனர்வாழ்வுக்கான நிலையத்துக்கு ஒப்படைக்கப்படலாம்.

(2) புனர்வாழ்வுக்கான நிலையமொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாள் அந்நிலையத்தில் புனர்வாழ்வுக்குட்பட்டிருக்கின்ற ஆட்களிடையே ஒழுங்கையும் ஒழுக்காறையும் பேணிக்காப்பது அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காக அவரினால் விடுக்கப்படும் எவையேனும் சட்டமுறையான பணிப்புகளுக்குக் கீழ்ப்படிதலை வலுக்கட்டாயப்படுத்துவதற்கு நியாயமாக அவசியமாகக்கூடியவாறான குறைந்தபட்ச வலோத்காரம் உட்பட அத்தகைய எல்லா வழிவகைகளையும் பயன்படுத்துவது அத்தகைய ஆளுக்குச் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

எந்த மீறுகைகளுக்கு குறிப்பிட்ட ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாதிருக்கின்றதோ அந்த மீறுகைகளுக்கான தண்டங்கள்

**29.** எவரேனும் ஆள், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவிடத்தும், அத்தகைய மீறுகை தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் தண்டம் எதுவும் குறித்துரைக்கப்படாதிருக்கின்றவிடத்தும், அத்தகைய ஆள், நீதிவான் ஒருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது

ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையி லொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*தரவுத் தளம்*

**30.** (1) பணியகமானது, தரவுத்தளமொன்றை உருவாக்கி முகாமைசெய்தலும் பேணுதலும் வேண்டும்; அது புனர்வாழ் வளிக்கப்பட்டவர்களின் எல்லா விபரங்களையும் உள்ளடக்கி யிருத்தல் வேண்டும். அத்தகைய தரவுத்தளம், ஒவ்வொரு புனர்வாழ்வளிக்கப்பட்டவரும் வேறு ஏதேனும் அரச அதிகாரசபை அல்லது முகவராண்மையிடமிருந்து பெற்றிருக்கக்கூடிய முன்னைய புனர்வாழ்வு உதவி பற்றிய விபரங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) பணியகமானது, அதன் எல்லாத் தரவுத்தளங்களினதும் தரவினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தொழில்நுட்ப பாதுகாப்பு வழிமுறைகள் உட்பட எல்லா அவசியமான நடவடிக்கை களையும் எடுத்தல் வேண்டும்.

*பணியகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்*

**31.** பணியகமானது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*பேரவையின் உறுப்பினர்கள், பணியகத்தின் ஆணையாளர் தலைமையதிபதி, அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்*

**32.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும், பணியகத்தின் ஆணையாளர் தலைமையதிபதியும் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை யின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**அமைச்சரின் பணிப்புகள்**

***33.*** அமைச்சர், காலத்துக்குக்காலம் பேரவையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகை பற்றிய பொது அல்லது விசேட பணிப்புகளை வழங்கலாம்.

**விதிகள்**

***34.*** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப் படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங் களும்;

(ஆ) பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(இ) அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் லீவு மற்றும் வேறு வேதனாதிகள் வழங்குதல்; அத்துடன்

(ஈ) பணியகத்தின் அலுவல்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம்.

(2) பணியகத்தினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரி னால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அது வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**ஒழுங்கு விதிகள்**

***35.*** (1) அமைச்சர், இச்சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடு களை நிறைவேற்றும் மற்றும் அவற்றுக்கு பயன்கொடுக்கும் நோக்கத் துக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவின் மீது அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் பின்வருவனவற்றிற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் -

(அ) புனர்வாழ்வுக்கான நிலையங்களின் பேணுகை; அத்துடன்

(ஆ) புனர்வாழ்வு, சிகிச்சை மற்றும் அதன் பின்னரான கவனிப்புக்கான நடவடிக்கைமுறை:

ஆயின், ஔடதங்களில் தங்கியிருக்கும் ஆட்களின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வுக்காகவுள்ள, புனர்வாழ்வுக்கான நிலையங்கள் தொடர்பில் ஏதேனும் ஒழுங்குவிதி ஆக்கப்படுகின்றபோது, அமைச்சர், தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஒருப்பாட்டைப் பெறுதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எத்தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**36.** வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் - பேணல்கள்

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களும் நியமிக்கப்பட்ட

தேதியன்றும் அதன் பின்னரும் பணியகத்தின் அசையும் மற்றும் அசையா ஆதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் அத்தகையவாறாக நியமிக்கப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரது பதவிக்காலம் முடியும் வரை அல்லது இச்சட்டத்தின் கீழ் புதிய ஆணையாளர் தலைமையதிபதியொருவர் நியமிக்கப்படும் வரை தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்;

(இ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் பணியகத்தின் அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் கீழ் அவர்களினால் துய்க்கப்பட்ட அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது பணியகத்தில் தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்;

(ஈ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளனவும் பயன்கொண்டதாகவுள்ளனவும் புனர்வாழ்வு ஆணையாளர் திறத்தவரொருவராக உள்ளனவும் புனர்வாழ்வு ஆணையாளர் சார்பாக உள்ளனவுமான புனர்வாழ்வு ஆணையாளர் தலைமைபதியின் எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், உத்தரவாதங்களும், அற்றோணி தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவத்தின் வழங்குகைகளும் எத்தகைய தன்மையினவையுமான வேறு சாதனங்களும், நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன்

பின்னரும் பணியகத்தினால் அல்லது பணியகத்தின் சார்பாக செய்துகொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள், உறுதிகள், முறிகள், உடன்படிக்கைகள், உத்தரவாதங்கள், அற்றோணி தத்துவங்கள், சட்டப் பிரதிநிதித்துவத்தின் வழங்குகைகள் மற்றும் வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் குறிப்பாக இல்லாதொழிக்கப் பட்டாலொழிய அல்லது பதிலீடுசெய்யப்பட்டாலொழிய, நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ள அல்லது பயன்கொண்டதாகவுள்ள ஏதேனும் ஒழுங்கு படுத்தும் குழு அல்லது அதிகாரசபை, மாகாண சபை, அல்லது உள்ளூர் அதிகார சபையினால் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்ட எல்லா அங்கீகாரங்களும் அல்லது உரிமங்களும், நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் பணியகத்துக்கு வழங்கப் பட்ட அங்கீகாரங்கள் அல்லது உரிமங்களாகக் கருதப் படுதல் வேண்டும்;

(ஊ) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பாக அல்லது அவருக்கு எதிராகப் பதியப்பட்ட எல்லா தீர்ப்புக்களும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் பணியகத்தின் சார்பாக அல்லது அதற்கு எதிராக பதியப்பட்ட தீர்ப்புக்களாக, தீர்வைகளாக அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(எ) புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின்கீழ் அங்கீகரிக்கப்பட்டு பேணப்பட்ட எல்லா பாதுகாப்பு ரீதியிலான இடவசதி மற்றும் புனர்வாழ்வு நிலையங் களும், நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட புனர்வாழ்வுக்கான நிலையங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**37**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலொழிய-

"அபாயகரமான ஔடதம்" என்பது, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஔடதம், பதார்த்தம், பொருள் அல்லது தயாரிப்பு எனப்பொருள் படும்;

"ஔடதங்களில் தங்கியுள்ள ஆள்" என்பது, எந்த ஆளுக்கு 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ் வளித்தலும்) சட்டம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒருவர் எனப்பொருள்படும்;

"அமைச்சர்" என்பது அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் புனர்வாழ்வுப் பணியகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப்பொருள்படும்;

"போதையூட்டும் ஔடதம்" என்பது, 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஔடதங்களை உள்ளடக்குதல் வேண்டும்;

"தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை" என்பது, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டடுப்பாட்டுச் சபை எனப்பொருள்படும்;

"உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள்" என்பது, 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களை உள்ளடக்குதல் வேண்டும்;

"புனர்வாழ்வு" என்பது, சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல், பிற்கவனிப்பு மற்றும் ஆதார சேவைகள் எனப் பொருள்படும்; இது உடநல மற்றும் உள கோளாறுகளைக் கொண்டுள்ள தனியாட்கள் அவர்களது சூழலுடன் இடைச்செயலாற்றும் போது அவர்களில் பணியாற்றுகையை அதியுச்சளவாக்குவதற்கும் இயலாமையை குறைப்பதற்கும் நாளாந்த செயற்பாடுகளில் இயன்றளவு வரை சுயாதீனமாக இருப்பதற்கும் திட்டமிடப்பட்ட இடையீட்டுத் தொகுதியொன்றை உள்ளடக்கும் என்பதுடன் கல்வி, வேலை, பொழுதுபோக்கு மற்றும் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையில் பங்குபற்றுவதனை இயலச்செய்வதாகும்.

**38.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*